9th September 1970]

State Housing Board Apartments

*101. *Q.*—THIRU M. ETHIRAJALU : Will the Hon. the Minister for Religious Endowments be pleased to state :

(*a*) the number of apartments available for allotment to State Government Servants in Madras City ;

(*b*) among them, the number of Quarters available for Government Servants drawing the scale of pay of (i) Rs. 90—150, (ii) Rs. 150—249, (iii) Rs. 250—500 ;

(*c*) whether any representation has been received from the Government Servants drawing the scale of pay of Rs. 150—249 in the month of April, 1970 requesting the Government to reserve apartments for Government servants drawing the scale of pay of Rs. 150—249 in the Foreshore Estate and Peters Road ; and

(*d*) if so, the action taken thereon ?

வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள்

திரு. எம். எத்திராஜுலு : மாண்புமிகு அறநிலைய அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) சென்னை மாநகரில் மாநில அரசுப் பணியாளர்களுக்கு ஒதுக்கப்படுவதற்கெனக் கிடைக்கிற குடியிருப்புகள் எத்தனை ?

(இ) இவற்றில், (1) ரூ. 90—150, (2) ரூ. 150—249, (3) ரூ. 250—500 சம்பளம் வாங்கும் அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்கிற குடியிருப்புகள் எத்தனை ?

(உ) கடற்கரை எஸ்டேட்டிலும், பீட்டர்ஸ் சாலையிலும், ரூ. 150—249 சம்பளம் வாங்கும் அரசுப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் ஒதுக்குமாறு அரசிடம் வேண்டிக் கொண்டு 1970 ஏப்ரலில், ரூ. 150—249 சம்பளம் வாங்கும் அரசுப் பணியாளர்களிடமிருந்து முறையீடு ஏதேனும் கிடைத்துள்ளதா ?

(எ) ஆமெனில், அதன்பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : (அ) 1278 (குடியிருப்புகள்).

(இ) (i) ரூ. 90-க்கு மேலும் ரூ. 150-க்குக் கீழும் அடிப்படைச் சம்பளம் பெறும் அரசு ஊழியர்கட்கு : 803.

(ii) ரூ. 150-க்கு மேலும் ரூ. 249-க்குக் கீழும் அடிப்படைச் சம்பளம் பெறும் ஊழியர்கட்கு : 120.

(iii) ரூ. 250-க்கு மேலும் ரூ. 500-க்குக் கீழும் அடிப்படைச் சம்பளம் பெறும் ஊழியர்கட்கு : 355.

(உ) ஆம்.

(எ) முறையீடு அரசினரின் பரிசீலனையில் உள்ளது.

[9th September 1970

திரு. எம். எத்திராஜுலு : இப்போது வீடு கட்டிக்கொடுக்கிற முறையில் குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களுக்கு அதிகமாக வீடுகள் கட்டிக்கொடுக்கப்படவில்லை என்றும், அதிகமான சம்பளம் வாங்குகிற வர்களுக்குத்தான் இப்போது வீடுகள் அதிகமாகக் கட்டிக் கொடுக்கப் படுகின்றன என்றும் இப்போது சொல்லப்படுகிறது. அதிகமாகச் சம்பளம் வாங்குகிறவர்களுக்குக் கட்டிக் கொடுக்கிற வீடுகளைக் குறைத் துக்கொண்டு குறைந்த சம்பளம் வாங்குகிறவர்களுக்குக் கொஞ்சம் அதிகமாக வீடுகள் கட்டிக்கொடுக்க இனியாவது அரசு சிந்திக்குமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : இரண்டு விதமான சிக்கல்கள் இதில் இருக்கின்றன. வீடுகள் கட்டி அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு விடுகிறோம் என்றால், அந்த வீடுகளுக்கு எக்கனமிக் ரென்ட் என்று ரூ.135 வரை வாடகை வாங்குகிறோம். ஆனால் அரசாங்க உத்தியோகஸ் தர்களுக்குக் கொடுப்பதால், சம்பளத்தில் 10 சதவீதம் வீட்டு வாடகை அலவன்சும் சேர்த்து ஏறக்குறைய ரூ. 40 தான் வாடகை வருகிறது. ஆகவே நாங்கள் இதில் நஷ்டப்படுகிற தொகை ரூ. 135-ல் ரூ. 40-ஐக் கழித்தால் வருகிற தொகையாகும். இப்படி ஒவ்வொரு அங்கணத் திற்கும் நஷ்டம் ஆகிறது.

இரண்டாவதாக, மத்திய அரசாங்கத்திடமிருந்து கடன் சுமார் பத்து ஆண்டுத் தவணையில் திருப்பிக் கட்டுவதாக வாங்குகிறோம். அதை 'எக்னமிக் ரென்ட்' என்று விட்டால், 10 ஆண்டுத் தவணையில் திருப்பிக் கொடுக்கலாம். குறைந்த வாடகைக்கு விட்டால், பத்து ஆண்டுத் தவணையில் திருப்பிக் கொடுக்க முடியாது. திருப்பிக் கொடுக்க வேண்டிய பொறுப்பு மாநில அரசாங்கத்திற்கு இருக்கிறது. அதனால் அதிகமாகச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு விட்டால் கொஞ்சம் கூடுத லாக வருமானம் வருமென்பதற்காக அவர்களுக்கு விடுகிறார்கள். இருந் தாலும், இந்த மனு பரிசீலனையில் இருக்கிறது. அது சம்பந்தமாகப் பரிசீலனை செய்து வருகிறோம்.

திரு. எம். எத்திராஜுலு : வீக்கர் செக்ஷன் என்கிற குறைந்த சம்பளம் உள்ளவர்களுக்கு வீடு கொடுக்க வேண்டுமென்ற திட்டம் பரிசீலனையில் இருப்பதாகத் தெரிகிறது. அந்தப் பரிசீலனை முடிந்து விட்டதா ? எப்போது அவர்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க அரசாங்கம் முன்வரும் ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : மாண்புமிகு உறுப்பினர் அவர்களே அதை ஒப்புக்கொள்கிறார்கள். அரசாங்கத்தின் பரிசீலனையில் அது இருக்கிறது. அது முடிவுபெற்றுவிட்டதாகச் சொல்வது சரியல்ல. என்ன செய்யலாம் என்று யோசித்துக்கொண்டிருக்கிறோம். அவர் களுக்கு ஆதரவாக ஏதாவது செய்ய முடியுமா என்று யோசித்துக் கொண்டிருக்கிறோம். அரசாங்கத்திற்கு வருகிற நஷ்டத்தை எப்படிச் சரிக்கட்டுவது என்பதுதான் நோக்கமே தவிர, அவர்களுக்குக் கட்டிக் கொடுக்கக் கூடாது என்ற நோக்கமில்லை. அதைச் செய்ய முடியாத நிலையில்தான் காலத்தாழ்வு ஏற்படுகிறது.

திரு. கே. அறிவழகன் : வீட்டு வாடகைப் படி, நகர ஈட்டுப் படி கிடைப்பதால் ரூ. 500-க்கு அதிகமாகச் சம்பளம் வாங்குகிறவர்களுக்கு ஒரு முறையும் அதற்குக் குறைவாக வாங்குகிறவர்களுக்கு ஒரு முறையும் அரசு கடைப்பிடிக்கிறார்கள். நம்முடைய ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் லாயிட்ஸ் ரோடிலும், ஃபோர்ஷோர் எஸ்டேட்டிலும் மிகக் குறைந்த வாடகையில் இருக்கிறார்கள் என்று அங்கே இருக்கிற மற்றவர்கள் கருதும் வகையில் ரூ. 60 வாடகை கொடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட சூழ்நிலை இருப்பதால், இந்த முறையை மறுபடியும் பரிசீலனை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. கே. வி. சுப்பையா : நகர ஈட்டுப்படி அல்லது டி.ஏ. சம்பந்தமானவற்றைப் பரிசீலனை செய்வது என்பது முதலமைச்சர் அவர்களும் நிதியமைச்சர் அவர்களும் கவனிக்கவேண்டிய காரியமாகும். என்னைப் பொறுத்த வரையில், வீட்டைக் கட்டி வாடகைக்கு விடுவது தான் என்னுடைய வேலை. ஆகையால் இப்போது அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு வாடகைக்கு விடுவதன் மூலமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 80-க்கு மேல் அவர்களுக்கு லாபம் கிடைக்கிறது. அதையும் சம்பளத்தில் சேர்த்தால் கிட்டத்தட்ட மாதம் ஒன்றுக்கு ரூ. 100 அதிகமாகச் சம்பளம் கிடைக்கும் என்று கருதுகிறேன். ஐ.ஏ.எஸ். பற்றிச் சொன்னார்கள். அது சம்பந்தமாக முதலமைச்சர் அவர்கள், நிதி அமைச்சர் அவர்கள் தான் கவனிக்கவேண்டியவர்கள் என்று சொல்லிக்கொள்கிறேன்.

Family pension

*102. *Q.*—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Electricity be pleased to state :

(*a*) whether any petition has been received from Thirumathi D. Dhanalakshmi, widow of late Thiru N.A. Dhandapani, Forest Range Officer, Thirupattur, North Arcot district, for the payment of family pension and gratuity consequent on the demise of her husband on 23-7-69 while in active service at Alangayam, Tirupattur Range, Salem division;

(*b*) whether sanction has been accorded for the payment of family pension and gratuity ; and

(*c*) if not, the reasons therefor ?

குடும்ப ஓய்வூதியம்

திரு. ஏ. ஆர். தாமோதரன் : மாண்புமிகு மின்சார அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன் :

(அ) வட ஆற்காடு மாவட்டம் திருப்பத்தூர், வனத்துறை அதிகாரியான காலஞ் சென்ற திரு. என். ஏ. தண்டபாணியின் மனைவி திருமதி டி. தனலெட்சுமி அம்மாள் தனது கணவர் சேலம் கோட்டம், திருப்பத்தூர் சரகத்தில் ஆலங்காயத்தில் பணியில் ஈடுபட்டிருந்தபோது 23-7-1969 அன்று தனது கணவன் இறந்ததனால் தமக்குக் குடும்ப ஓய்வூதியமும் பணிக்கொடையும் கொடுக்கப்பட வேண்டுமென்று மனுச் செய்து கொண்டாரா ?

(இ) குடும்ப ஓய்வூதியமும் பணிக் கொடையும் வழங்கப்படுவதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளதா ?

(உ) இல்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை ?